1978-2-17
PERIODICALS DIVISION
UNIVERSITY ... CAMPUS LIBRARY

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 5 ரபீ அவ் 8 இதழ் 7
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17-2-78

சன்சயின் பார்சோப்
எல்லா ப. நோ. கூ. சங்கங்களிலும் மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக்கொள்ளலாம்.
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

## அவசரக் கோரிக்கை

(யாழ்ப் ாணம்)
ஆகஸ்ட் கலவரங்களை நேரில் கண்டவர்களும், சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்க விரும்புபவர்களும், யாழ்ப்பாணம் 'பாம் கோட்டில்' தன்னைச் சந்திக்குமாறு, புனர்வாழ்வு கழக தலைவர் திரு. கே. ஐ. நித்தியானந்தன் அறிவித்திருக்கிறார்.

(2-ம் பக்கம்பார்க்க)

### யாழ்.நகரில் ஊரடங்கு அமுலில் இருந்தபோது:

# 'சிற்றிபேக்கரி'யை உடைத்து சேதப்படுத்தியது இராணுவம்

## மின்சாரநிலைய இரவு ஊழியர் சாட்சியம்

### கவசமோட்டார் இலக்கங்களையும் கமிஷனிடம் வெளியிட்டார்

### அம்பாள் கபேயை உடைத்ததையும் பார்த்தாரம்

[நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன்]

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு சட்டம் இருந்த நேரத்தில் நள்ளிரவு ஒரு மணியளவில் கவசமோட்டாரில் வந்த இராணுவத்தினர் சிற்றி பேக்கரியை உடைத்து உள்ளே சென்று தாக்கி சேதப்படுத்தி உணவுப் பண்டங்களை கொள்ளையடித்ததாக யாழ். மின்சார நிலைய இரவு ஊழியரான கந்தசாமி தர்மகுலசிங்கம் நேற்று சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.**

இந்த கவசமோட்டார் காரின் இலக்கங்களையும், சன்சோனி கமிஷனுக்கு சமர்ப்பித்தார்.

அதன்பின் சிற்றிபேக்கரி முதலாளியுடன் வந்த கடற்படையினர் அருகில் உள்ள அம்பாள் கபேக்குள் சென்று பல பொருட்களை கொள்ளையடித்துச் சென்றதாகவும் தர்மகுலசிங்கம் தெரிவித்தார்

முதலில் வந்த இராணுவத்தினர் அம்பாள் கபேக்குள்ளும் சென்று தளபாடங்களை உடைத்து றேடியோவை மேசையில் போட்டடித்து உணவுப் பண்டங்களை கொள்ளையடித்துக்கொண்டு வந்து வெளியில் நின்ற கவச மோட்டாரில் கொண்டு சென்றதாகவும் அவர் கூறினர். [illegible] தான் ஆடாமல் அசையாமல் மின்சார நிலைய மேசையில் சரிந்து கிடந்தபடி ஊரடங்குச் சட்ட நேரத்தில் நடந்த இச்சம்பவங்களை யன்னல் வழியாகப் பரர்த்ததாகவும் கூறினர்.

யாழ்ப்பாண மாநகரசபை ஊழியரான தர்மகுலசிங்கம் முன்பு ஸ்பெஷல் பொலிஸ் படையில் கடமையாற்றியதாகவும் குறிப்பிட்டார்.

திரு தர்மகுலசிங்கம் கூறியதாவது: 77-ம் ஆண்டு ஆகஸ்ட் 19ம்தேதி இரவு 1. 30மணிக்கு நான் யாழ்ப்பாணம் மின்சாரநிலையத்தில் இரவுவேலை செய்தேன். அன்று யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு சட்டம். படைப் பிரிவினரை தவிர எவரும் வெளியில் நடமாடமுடியாது.

அப்போது, 2 கவச மோட்டார் காரும், ஒரு ஜீப்பும் வந்து மின்சாரநிலையத்திற்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்தன

அதிலிருந்து இறங்கியவர்கள் சிற்றிபேக்கரிக்குப் போனார்கள். இவர்கள் பூட்டைத் துறந்து உள்ளே போனார்கள். இவர்கள் போகுமுன், பேக்கரி பூட்டப்பட்டிருந்தது. உள்ளே போனதும் லைட்டைப் போட்டார்கள். பின் வெளியில் வந்தார்கள். பிஸ்கட் பக்கட்டுகள், சாக்லட் பாக்கட்டுகளை கொண்டுவந்து, கவச மோட்டார்காருக்குள் போட்டார்கள். சிலவற்றை அங்குநின்று சாப்பிட்டார்கள்.

உள்ளே கண்ணடி 'கிளீங்' என உடைந்து கேட்டது.

### அம்பாள் கபேயில்

பின் சிற்றிபேக்கரிக்கு அருகில் உள்ள அம்பாள் கபேயின் பூட்டை உடைத்து உள்ளே போனார்கள். அங்கும் லைட்டை போட்டார்கள். றேடியோவை தூக்கி மேசையில் போட்டு 'படார்' என்று உடைத்தார்கள். அக்கடையிலிருந்து உணவுப்பண்டங்களை கொண்டு வந்து கவசமோட்டாருக்குள் ஏற்றினர்கள். இவற்றை சாப்பிட்டார்கள். சோடாபோத்தல்களையும் எடுத்துவந்தார்கள். மணிக்கூடு ஒன்றையும் தூக்கிவந்தார்கள். றேடியோ ஒலிபெருக்கியையும் பிடுங்கிக் கொண்டுவந்தார்கள். ஜீப்பில் போட்டார்கள். சிற்றிபேக்கரியில் முதலில் சோடா போத்தலும் உடைத்துக் கேட்டது.

### கவசமோட்டார் இலக்கம்

ஒரு கவசமோட்டார் நம்பர் குறித்துவைத்திருக்கிறேன்.

கமிஷனர்: என்ன நம்பர்?

—தர்மகுலசிங்கம்: முதலில் சிங்கள எழுத்து யூ. ஹ. என இருந்தது. அத்துடன் 4357 என்ற நம்பர் இருந்தது. மற்ற கவச மோட்டாரில நம்பர் எடுக்கமுடியவில்லை' ஜீப்பின் நம்பர்முழுதும் எடுக்கமுடியவில்லை 31 சிறி 6 மட்டும் தெரிந்தது. மற்ற இலக்கம் தெரியவில்லை. அதன்பின் போய் விட்டனர்.

ஒரு மணி நேரத்தின்பின் வாகனங்கள் வந்தது கேட்டது. ஒரு ஜீப்பும் பெரிய ட்ரக்கும் வந்தது சிற்றிபேக்கரி முன் நின்றது ஒரு வாகனத்தில் கடற்படையினரும் மற்றதில் சிற்றிபேக்கரி உரிமையாளரும் வந்தனர் பெரிய வாகனத்தில் சிற்றிபேக்கரி தளபாடங்களை ஏற்றினர்கள். பிறிட்சையையும் ஏற்றினர்.

பின் அம்பாள் கபேக்குள் போனர்கள். அங்குள்ள சாமான்களையும் கொண்டு வந்து ஏற்றினர்கள். அதன் பின் போனர்கள்.

கமிஷனர்: இதில் பொலிஸ் கடற்படையினர் இராணுவத்தினர் பங்கு பற்றினர்களா?- பொலிஸார் வரவில்லை.

கமிஷனர்: இரண்டாம் முறை கடற்படையினர் வந்தனர்- பின் இராணுவம் வந்தது.

கமிஷனர்: இரண்டாவது தடவை இராணுவத்தினரும் வந்தனரா?- கடற்படையினர் வந்து சில நிமிட நேரத்தால், இராணுவத்தினர் இரண்டாம் முறை வந்தனர்.

மறுநாள் பொலிஸார் வந்து என் வாக்கு மூலத்தை எடுத்தனர்

20ம் தேதி இரவும் யாழ்ப்பாணத்தில் ஊரடங்குசட்டம். வெளியில் எவரின் நடமாட்டமும் இல்லை; நான் மின்சார நிலையத்தில் இருந்தேன். யாழ்ப்பாண மக்களால் நிறுவப்பட்ட பிரபல தமிழ் புலவரான சோமசுந்தரப் புலவரின் சிலை மின்சார நிலையத்திற்கு அருகில் உள்ளது.

இரவு 10 மணிக்கு வாகனங்கள் வரும் சத்தம் கேட்டது வாகனத்தில் வந்த இராணுவத்தினர், சோமசுந்தரப் புலவரின் சிலைக்குமேல் ஏறி சிலையை உடைத்தார்கள். கவச மோட்டாருடன் ஜீப்பும் வந்தது. சாதாரண ஆட்கள் ரோட்டில் நடமாட்டம் இல்லை. சிலையை உடைத்த 10 நிமிடத்தின் பின். பஸ் நிலையத்திற்கு லைட் அடித்து பார்த்தார்கள் அங்கும் ஒரு வாகனம் நின்றது.

அன்றுவந்த இரு இராணுவக் கவச மோட்டாரின் இலக்கம் குறித்துள்ளேன். ஒன்று முதலில் சிங்களத்தில் யு ஹ எண் எழுதி, 4360 இலக்கம் பொறிக்கப்பட்டிருந்தது. மற்ற மோட்டாரிலும் சிங்கள யு ஹ எழுதி 4357 இலக்கம் பொறிக்கப்பட்டிருந்தது ஒரு ஜீப்பும் 3 கவச மோட்டார்

[6ம் பக்கம் பார்க்க]

## யாழ். சம்பவங்கள் பற்றி எஸ். பி. லியனகே இப்படிக் கூறினராம்

### அனுராதபுரம் சுகாதார ஊழியர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

அனுராதபுரத்தில் நடந்தவற்றை யாழ்ப்பாணத்துடன் ஒப்பிட்டால் ஒன்றுமே இல்லை என்று பொலிஸ் அதிபர் லியனகே வைத்திய அத்தியட்சகரிடம் கூறினராம்.

சன்சோனி கமிஷனிடம் அனுராதபுரம் சுகாதார அத்தியட்சகர் காரியாலய உத்தியோகத்தர் தர்மலிங்கம் நேற்று இத் தகவலை வெளியிட்டார்."

. அனுராதபுரம் சுகாதார கந்தோரில் கடமையாற்றிய சிவசம்புவை, அங்கு கடமையாற்றிய சிற்றூழியர்களான சரணபாலா, உக்குபண்டா ஆகியோர் பயங்கரமாகத் தாக்கினர்கள். சிவசம்பு பின் இறந்துவிட்டார். வேலாயுதம், அப்பர் ஆகியோர்களையும் சிற்றூழியர் தாக்கியதை கண்ணலகண்டேன் என்றும் அவர் சொன்னர்

திரு. சிவசுப்பிரமணியம் மேலும் கூறியதாவது: 17ம் திகதி காலை அனுராதபுரம் கடைத்தெருவில் தாக்கி கொள்ளையடிக்கப்பட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து 50 யார் தூரத்திலுள்ள வைத்திய அத்தியட்சகர் கந்தோருக்கு செலரேம் இரவு சாப்பாட்டை முடித்துவிட்டு சுகாதாரகந்தோரைச் சேர்ந்த 16 பேரும் ஒரு சிறுவனும் அங்கு தங்கியிருந்தோம். அப்போது சுகாதாரகந்தோரில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் வந்து திடீரெனத் தாக்கினர்கள்,

கமிஷனர்; உங்கள் கந்தோரில் கடமையாற்றும் சிற்றூழியரா தாக்கினர்கள்?—

ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சிற்றூழியர் ஒவ்வொருவராக பிடித்து தாக்கினர்கள். நான் மேசைக்கு கீழ் பதுங்கிவிட்டேன் சுகாதாரசேவை சுப்பிரிண்டன்ட் கந்தோர் சிற்றூழியரான சரணபாலாவும், ஆஸ்பத்திரி சிற்றூழியரான உக்குபண்டா

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

மரவிளையாட்டுப் பொருட்கள் உற்பத்திசெய்யும்தொழிற்சாலைக்கு மெசினில் வேலைசெய்யும் அனுபவமுள்ள வேலையாட்கள் நாட்சாட்சிப் பத்திரத்திரத்துடன் நேரடித்தொடர்பு கொள்க. மனேஜர் யாழ் டொயிஸ், 246, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 8531

லேத்மன் பிற்றரும், அப்பிறன்ரிசும் (Latheman Fitter & An Aprentice) தேவை. விண்ணப்பிக்கவும். யந்திரம்ஸ், 336, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 8527

ஜாம், சோஸ், கோடியல் வெற்றுப்போத்தல்கள் நல்ல விலைக்குவாங்கப்படும். ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ், 11, 12, நியூ மார்க்கெற், யாழ்ப்பாணம். 8536

சித்திரம் வரைவதில் அனுபவமுள்ள பெண்களும் பையன்களும்தேவை. உடனே நேரில் மனுச்செய்க. அரஸ்கோ, இண்டஸ்றீஸ், 163, கண்டிவீதி, யாழ்ப்பாணம். 8535

சீமேந்து வெற்று (B) பாக்குகள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். 8522

ஆங்கில அறிவும் இசையார்வமும் உள்ள மனேச்சர் ஒருவர் உடனடியாக தேவை. விபரங்களுக்கு: பரமேஸ் கோணேஸ் புரடக்ஷன்ஸ், 9, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 8509

### வாடகைக்கு

யாழ் பெரியகடைக்கு அண்மையில் வசதியான வீடு. சிறு குடும்பம் உத்தியோகஸ்தர், 193, நாவலர் வீதி, வண்ணார்பண்ணை. 8524

### விற்பனைக்கு

குறுண்டிக்ஸ்றியோறேடியோசகிரும் - மாண்டலோ (Mandello) 3 WE/FM மொடல்- 4 ஸ்பீக்கர் FM பான்டுடன், குறுண்டிக் ஸ்றியோ ரேப்றெக்கோடர் TK 248 மொடல். விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: புதிய இல. 127. கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி 18, 19, 20-ந் திகதிகளில் காலை 9-00- மாலை 5-00 மணிக்கிடையில் பார்வையிடலாம். 8502


## அறிவித்தல்
### வீதிக்குப் பெயரிடுதல்

யாழ்ப்பாணம் குருநகரில் கொண்டடி வீதியென வழங்கும் வீதியின் பெயரை "யாக்கோ" வீதியென மாற்றுப் பெயரிட உத்தேசிக்கப்படுகிறதென்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது

அப்பகுதியில் வசிப்பவர்கள் அல்லது அப்பகுதியிலுள்ள அமைப்புக்கள் நிறுவனங்களின் கருத்துக்கள் இவ்வறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலவரை இதன்கீழ்க்கையொப்பமிட்டிருப்பவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(க. சிவஞானம்)
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

வேலைப்பகுதி,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
14-2-78 8529


PERCIVAL HALL
Chapel Street,
Jaffna.
CHARTERED
PRELIMINARY
Bilingual (English & Tamil)
Application close 22-2-78
Enrolment 27-2-78
8528

## நெசவாளர்கள் தேவை

மின்தறியில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ள ஆண் நெசவாளர்களிடம் இருந்து

**மூன்றும் பகுதிக்கு மாத்திரம்**

துண்டு அடிப்படையில் வேலை செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயது:

**21 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்கள்**

சங்க எல்லைக்குட்பட்டவர்களுக்கு முதலிடம்கொடுக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவையும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நெசவாளர் விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு, தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை என விலாசமிட்டு 28-2-78-ம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சங்கானை.

வி. கந்தசாமி,
பொதுமுகாமையர்.
8534

## ஆசிரியர் தேவை
### யா/நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை

பின்வரும் தற்காலிக ஆசிரியர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

1. க. பொ. த. உயர் வகுப்புக்களில் தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகம் படிப்பிக்க ஓர் ஆசிரியர்.

[மேற்படி பாடங்கள் உடைய பட்டதாரிகளும், இப்பாடங்களைப் பட்டப் பரீட்சைக்கு எடுத்தவர்களும். மட்டும் விண்ணப்பிக்கலாம்[.

2 8-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்புவரை கணிதம் படிப்பிக்க ஓர் ஆசிரியர்.

[க. பொ. த உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்கள் சித்திஎய்தி, அவற்றில் தூயகணிதம் பிரயோக கணிதம் ஆகிய பாடங்களில் விசேட சித்தி, திறமைச்சித்தி பெற்றவர்களாயிருத்தல் வேண்டும்.]

விண்ணப்பிப்பவர்கள் 24-02-78 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்குக் கல்லூரி அலுவலகத்திற்குத் தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகப். பரீட்சைக்கு வருகை தரவும்.

பொ. சோமசுந்தரம்.
அதிபர்.
8533


## கொள்ளையர்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒருயாநாட்டை நடத்தினர்கள்.

### தண்ணீருமின்றி 6000 தமிழ் அகதிகள்

சுமார் 6000தமிழர்கள் அகதிகளாக கச்சேரிக்கு வந்திருந்தனர். சிறுவர்கள், குழந்தைகள், வயோதிபர்கள், தாய்மார்கள் குடிக்கத்தண்ணீர்கூட இல்லாமல் கஷ்டப்பட்டனர். நாவரண்டு, குழந்தைகள் துடிதுடித்தனர். கடைகளுக்குச் செல்லமுடியாது. உதவி செய்வார் எவரும் இல்லை. கச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் இருந்தது. அகதிகளைப் பாதுகாப்பான பகுதிக்குக்கொண்டு செல்ல ஏற்பாடு செய்யுமாறு ஜி. ஏ. யிடம் கூறினேம்.

அகதிகளைக்கொண்டு செல்லச் சிங்களச்சாரதிகள் மறுப்பதாக ஜி. ஏ கூறினார். இராணுவச் சாரதிகளைக்கொண்டுவாகனங்களை செலுத்தலாம் என நான் ஆலோசனை கூறினேன்.

யாழ்பாண வளாகத்திலிருந்து 5 பஸ்கள் சிங்கள மாணவர்களைக் கொண்டு வருவதாக இருந்தது. அதில் ஏற்பாடு செய்யுமாறு கேட்டோம். நடக்கவில்லை.

### 6000 பேரும் பட்டினி

18-ம் தேதி 6000 பேருக்கும் சாப்பிடஎதுவுமே இல்லை தண்ணீர் கூட இல்லை. ஒரு பிளேன்டீ கூட எடுக்கமுடியவில்லை. புதன் காலைமுதல் வியாழன் மாலைவரை எவரும் தண்ணீர்கூட குடிக்கவில்லை.

வவுனியாவுக்குப் பாதுகாப்புடன் செல்ல 5 பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டது இந்த பஸ்களுடன் எங்கள் இலாகா லொறிகளிலும் காணி இலாகா லொறிகளிலும் அகதிகள் செல்வது பற்றிக்கூறப்பட்டபோது பொலிஸ் அதிபர் திரு. லியனகே மறுத்துவிட்டார்.

கமிஷனர்: ஏன்?- எனக்குத் தெரியாது. எனினும் காலை 11 மணிக்கு ஒழுங்குசெய்து மாலை 5-30 மணிக்கு பஸ்கள் புறப்பட்டன. இரவு 9மணிக்கு பஸ்கள் புறப்பட்டன. இரவு 9 மணிக்குத் தனிப்பட்டர்களின் லொறிகளும் செல்ல ஒழுங்குசெய்யப்பட்டது.

பெண்கள் குழந்தைகள் தண்ணீரின்றி ஜீவமரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள். அவர்களை அனுப்புவது பற்றிப் பொலிஸ் அதிபருடன் பேசியபோது முட்டாள் சனங்களே உங்களுக்கென்ன தெரியும் எனக் கூறினார். கச்சேரிக்கு அகதிகள் வந்து . குவிந்துகொண்டேயிருந்தனர். 19-ம் தேதி லொறிகளில் அகதிகள் வவுனியா போனார்கள்.

19-ம் தேதி யாழ்ப்பாணத்திலிருந்து 10 பஸ்கள் வந்தன.

கமிஷனர்: யாழ்ப்பாணத்திலிருந்தா?- ஆம். அங்குள்ள சிங்கள அகதிகள் அனுராபுரத்திற்கு வந்தார்கள். நாங்கள் அந்த பஸ்ஸில் காலை 7மணிக்கு ஏறி 11 மணிக்கு பாதுகாப்பு பகுதியான வவுனியாவை அடைந்தோம். அங்கு ஒரு விவசாயப் பாடசாலையில் தங்கியிருந்தோம்.

என் கார் 17-ம் தேதி முதல் பங்களா கராஜில்தான் இருந்தது 18 ம் தேதி காலை 11 மணிக்கு நான் கச்சேரி முகாமிலிருந்தபோது என் விடுதி கொள்ளையடிக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்தது என்காரில் கொள்ளையடித்த சாமான்களை கடத்திச்சென்றனர் நான் காரைக்காணவில்லை. காரின் பெறுமதி 10,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்ட சாமானின் பெறுமதி 45,000 ரூபா. என் கார் எரிக்கப்பட்டதாக அறிந்தேன்.

யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து பஸ்ஸில் செப்டம்பர் மாதம் 13-ம் தேதி அனுராதபுரத்திற்குப் போய்ப் பார்த்தேன். என் கார் எரிக்கப்பட்டுவிட்டதாக பொலிஸில் அறிந்தேன். [க-அ]

# ஷா கமிஷன்முன் ஆஜராக இந்திராகாந்தி மறுப்பு

புதுடில்லி, பெப் 16

நெருக்கடி நிலை அமுலிலிருந்தபோது இடம் பெற்றதாகக் கூறப்படும். அத்துமீறிய செயல்கள்பற்றி ஆராயும் ஷா கமிஷன் முன்னிலையில் இம்மாதம் 25 ம் திகதி ஆஜராகுமாறு விடுத்த உத்தரவை திருமதி காந்தி நிராகரித்துள்ளார்.

திருமதி காந்திமீது சுமத்தப்பட்டுள்ள 11 குற்றச்சாட்டுக்கள்மீது விசாரணை செய்வதற்காக இம்மாதம் 25 ம் திகதி நேரிலோ வழக்கறிஞர் மூலமோ ஆஜராகுமாறு திருமதி காந்திக்கு உத்தரவு அனுப்பப்பட்டிருந்தது.

ஏற்கனவே இரு தடவைகள் கமிஷன் முன்னிலையில் திருமதி காந்தி ஆஜரானபோதிலும் சாட்சியமளிக்க மறுத்ததை அடுத்து அவர்மீது மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே.

இருந்தபோதிலும் திருமதி காந்திக்கு இறுதிச்சந்தர்ப்பம் ஒன்றை அளிப்பதற்காக இம்மாதம் 25 ம் திகதி ஆஜராகுமாறு கமிஷன் அழைப்பு விடுத்திருந்தது [இ]

# குப்பிழானில் செந்திநாதையர் நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

நாவலர் பெருமானின் நன்மாணாக்கரும் அவர் வழி நின்று பணி புரிந்தவரும் பல நூல்களை எழுதியவருமான சித்தாந்த சிகாமணி, சைவசித்தாந்தபானு காசிவாசி சி. செந்திநாதையரின் உருவப்படத் திரை நீக்கமும் அவரது வாழ்வு, பணிபற்றிய நூல் வெளியீட்டு விழாவும் நாளை சனிக்கிழமை மாலை அவர் பிறந்த இடமான குப்பிளானில் நடைபெறவிருக்கிறது.

விக்னேஸ்வர வித்தியாசாலையில் அதன் அதிபர் திரு. க. சண்முகம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவை ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர் திரு. ச அம்பிகைபாகன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார். எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உருவப்படத்தைத் திரை நீக்கம் செய்துவைப்பார்.

யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நூலை வெளியிட்டுவைப்பார். திரு. வி. தர்மலிங்கம் எம். பி., திரு. ரி திருநாவுக்கரசு எம். பி., திரு. ஐ. குமாரசாமிக் குருக்கள் ஆகியோர் நூற்பிரதிகளை வாங்குவர்.

கலாநிதி அ. சண்முகதாஸ் ஆய்வுரையும், திரு. ச. விநாயகமூர்த்தி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சிறப்புரையும் ஆற்றுவர்

சக்கடத்தார் நாடகமும் இடம் பெறும்.

செந்திநாதையர் ஞாபகார்த்தசபை இவ்விழாவை நடத்துகிறது. (அ)

# கூட்டணி நல்லூர் மாவட்டக் கிளை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நல்லூர் மாவட்டக் கிளைப் புனரமைப்புக் கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. கிளைத் தலைவர் திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் கூட்டம் நடைபெறும்

பட்டிருப்பில் நடைபெற்ற கூட்டணி நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மாவட்டக் கிளைப் புனரமைக்கும் தீர்மானத்திற்கு இணங்க இப்புனரமைப்பை ஆரம்பிப்பதாகவும், இத்திகதி வரை எந்தவொரு கிளையும் புனரமைப்புச் செய்வதற்கு மாவட்டக் கிளை அனுமதி வழங்கவில்லையென்றும் சகல மாவட்டக் கிளைகளுக்கும் கூட்டணி மாவட்டக் கிளைச் செயலாளர் திரு. க. பரமசாமி தெரிவித்தார்.

நாளை நடைபெறும் நல்லூர் மாவட்டக் கிளைப் புனரமைப்புக் கூட்டத்தில் நல்லூர் எம். பி. திரு மு. சிவசிதம்பரம் கலந்துகொண்டு, நடவடிக்கைக் குழுவின் பட்டிருப்புத் தீர்மானத்தை எடுத்து விளக்குவார். (அ)

# நாடகமும் நூல் வெளியீடும்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர் பேரவையின் வெளியீடான நவாலியூர் செல்லத்துரை எழுதிய "உலகம் எங்கள் கையிலே' நாடக நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பல்கலை மணி க. தம்பிராசா தலைமையில் நடைபெறுகிறது.

இந்நூலின் ஓர் அங்கமான 'கண்டியம்பதிக் காவலன்' நாளை இரவு இாத மண்டபத்தில் மேடையேறுகிறது. இயக்குநர்மாமணி அ. நற்குணசேகரன் இதனை நெறிப்படுத்துகிறார். முன்னணி நடிகர்கள் பலர் இதில் நடிப்பர்.

## அவசரக்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நேரில் சம்பவங்களை பார்த்தவர்களின் சாட்சியங்கள் அவசியம் தேவைப்படுவதால், உடனடியாக தம்மை சந்திக்குமாறும் அவர் கேட்டுள்ளார். [க]

# பெண்ணிடம் வழிப்பறி: ஒருவருக்குப் பிணை; இருவர் விடுதலை

[பண்டத்தரிப்பு]

அடகு வைத்த நகையை வழக்கம்பரையிலுள்ள அடைவு கடையிலிருந்து மீட்டு எடுத்துக்கொண்டுவந்த அராலியைச் சேர்ந்த பெண் ஒருவரிடமிருந்து அந்த நகையைப் பறித்துக்கொண்டு ஓடியதாக சந்தேகத்தின்பேரில் சங்கானைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட மூன்று வாலிபர்களையும் பொலிசார் மல்லாகம் நீதிமன்ற நீதிபதி எம். டி. ஜேசுரட்ணம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)


## தேவை

விவசாய சம்பந்தமாக விவசாயிகளை நேரடியாக தொடர்பு கொண்டு பிரசாரம், அறிவூட்டல் செய்வதற்கு விவசாயப் பட்டதாரிகள் அல்லது விவசாய டிப்ளோமா தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி 21-02-78**

விளம்பர இலக்கம்-10, மே/பா ஈழநாடு,
த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu

## மாவட்ட ரீதியில் ஆசிரிய நியமனம்

ஆசிரியர்களை மாவட்ட ரீதியில் நியமிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையானால் கல்வி அமைச்சு நிச்சயம் பாராட்டைப் பெறும்.

ஆண்டுதோறும் ஆசிரியர் இடமாற்றம் பெரும் பிரச்னையாக இருந்துவருகிறது.

இடமாற்றங்களினால் ஆசிரியர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைவிட மாணவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதற்கு முன்னர் பொது ஸ்தாபனங்களும் மதஸ்தாபனங்களுமே பாடசாலைகளை நிர்வகித்து வந்தன.

பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கும்போது பாடசாலை எந்த ஊரில் இருக்கிறதோ அந்த ஊரைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் நியமிக்கப்பட்டனர்.

இப்படி நியமித்ததால் ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வியிலும், ஒழுக்கத்திலும் அக்கறை செலுத்தினர். பாடசாலையின் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டிருந்தனர்.

தங்கள் பிள்ளைகளின் நலனில் ஆசிரியர்கள் ஆர்வம் கொண்டிருப்பதை உணர்ந்து ஊரவர்களும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவி வந்தனர்.

வடபகுதியில் கல்வி முன்னேற்றமடைந்ததற்கு இதுவே காரணம்.

பாடசாலைக்குப் புதிய கட்டிடம் தேவையென்றாலும் விஞ்ஞானகூடம் அமைப்பதென்றாலும் அரசாங்கத்தின் தயவை எதிர்பாராது பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் மக்களிடமே நிதி திரட்டச் செல்வர். மக்களும் மனம் சலிக்காமல் பணம் கொடுத்தனர்.

தங்கள் பாடசாலையென்றே ஆசிரியர்கள், பிள்ளைகள் பெற்றோர் கருதினர். ஒரே பாடசாலையிலேயே ஆசிரியர்கள் கடமையாற்றியதும் இதற்கொரு காரணமாக இருக்கலாம்.

அரசாங்கம் பாடசாலைகளை எடுத்தபின்னர் ஆசிரியர்களும் அரசாங்க ஊழியராகிவிட்டனர். அரசியல் தலையீடுகளும் ஆசிரிய நியமனங்கள், இடமாற்றங்களில் ஏற்பட்டன.

வேறு ஏதோ ஓர் ஊரைச் சேர்ந்தவர் மற்றோர் ஊரிலுள்ள பாடசாலைக்கு அதிபராகவோ ஆசிரியராகவோ நியமிக்கப்படுவார். அவருக்கு என்ன அக்கறை. மாதம் முடிந்ததும் அரசாங்கம் சம்பளம் கொடுக்கும்.

கல்வி அமைச்சின் புதிய திட்டத்தின்படி அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே அந்தந்த மாவட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டால் பிள்ளைகளின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் ஆசிரியர்களுக்கு அக்கறை ஏற்படும். பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் பாடசாலையின்மீது ஒரு பிடிப்பு ஏற்படும்.

புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களை மட்டுமல்லாது இப்போதுள்ள ஆசிரியர்களையும் இயன்றவரை அவர்களின் சொந்த மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதும் பெரும் பயனளிக்குமென்று எதிர்பார்க்கலாம்.

### தமிழ் மண்ணில் வாழும் மக்களின்

# உரிமைகளை வென்றெடுக்க தொடர்ந்து போராடுவேன்!

## 'வி. பி' தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"எனக்கு எவர் மீதும் குரோதமில்லை. கட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி; நான் பிறந்து வளர்ந்த தமிழ் மண்ணில் வாழும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் பணியில் சர்வ தேசத் தொழிலாளர் வர்க்க சகோதரத்துவத்தைப் பேணி நின்று போராட விரும்புகிறேன்" என்று செந்தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் 'ஈழநாடு'க்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். தமது நீண்ட அறிக்கையில் திரு. வி. பி. மேலும் தெரிவித்திருப்பதாவது:

"பதிவுத் தபால் மூலம் 18-2-78ந் திகதியிடப்பட்ட கடிதமொன்று கிடைக்கப்பெற்றேன். அதன்படி 12-2-78ல் கூடிய மத்திய கமிட்டி என்னை ஏகமனதாகக் கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக் குழுவினர் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து குற்றங்கள் அனைத்தையும் நானே ஒப்புக்கொண்டிருப்பதால் அதன்படி என்னைக் கட்சியிலிருந்து நீக்குவது என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

### கட்சி அனுப்பிய கடிதம்

"இக்கடிதத்தில் நான் 3-2-78ல் எழுதிய கடிதம் மத்திய கமிட்டியால் பரிசீலனை செய்யப்பட்டதென்றும் எனினும் விசாரணைக் குழுவின் தீர்ப்போடு ஒத்த விடயங்களை என்னுடன் நேரில் பேசவிரும்பியபோதிலும், நான் அத்தகைய வாய்ப்பினைப் பயன்படுத்தத் தவறிய காரணத்தினாலும் மேற்படி முடிவு எடுக்கப்படுகிறதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"என்னை மத்திய தலைமைப் பீடத்தைச் சந்திக்கும்படி கேட்டுக்கொண்ட தந்தியொன்றும் ஒரு கடிதமும் 30ந் தேதி கிடைக்கப்பெற்றேன். அதில் 8ந் தேதிக்கு முன்னர் என்னைக் கொழும்பில் சந்திக்கும்படியும் கேட்டிருந்தனர். ஆனால் மேற்படி கடிதம் எனக்கு 4ந் திகதிதான் கிடைத்தது.

"அவர்கள் அனுப்பிய கடிதத்தில் விசாரணைக் குழுவினர் எடுத்த தீர்ப்பின்படி என்னைக் கட்சியிலிருந்து நீக்குவதே குற்றங்களின் தன்மையைப் பொறுத்துத் தாம் செய்யக்கூடிய சிபார்சென்றும் எனினும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகக் கட்சிக்கு ஆற்றிய தொண்டினைக் கருத்திற்கொண்டு, மேற்படி தவறுகளுக்கு நான் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் கட்சியில் தடுத்துவைக்கப்பட்ட காலந்தொட்டு ஓர் ஆண்டுக்கால இடை நீக்கத்தைத் தண்டனையாகக் கொடுத்து மீண்டும் கட்சியில் சேர்ந்து இயங்க அனுமதிக்கப்படலாமென்றும் விசாரணைக் குழுவின் சிபார்சு அமைந்திருந்தது. ஆகவே மேற்படி முடிவுகளைக் கருத்திற்கொண்டு நான் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு என் நிலைமையைத் தெளிவாக்கினேன்.



### நான் அளித்த விளக்கம்

"மத்தியகமிட்டியால் எனக்கு எதிராகச் சுமத்தப்பட்டுக் குற்றம் காணப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு விதிக்கும் நியாயபூர்வமான தண்டனையையும் நான் ஆலோசனையாகவோ நிபந்தனையாகவோ ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேனென்றும், மேற்படி நடைமுறைகளுக்காக, நான் வருத்தம் தெரிவித்து, அதே நேரத்தில், கட்சி தமிழினம் சம்பந்தமாக மேல்வரும் நிலைப்பாடுகளை ஏற்குமென்ற நம்பிக்கையுடனும் இக்கடிதத்தை எழுதுவதாகக் குறிப்பிட்டேன். அக்கடிதத்தில்:

[அ] இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து, வடக்கு, கிழக்கிலுள்ள பாரம்பரியத் தாயகங்களில் வாழ்ந்துவரும் தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஒரு பிரதேசமோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேசங்களிலோ சுயாட்சி அமைப்பை அல்லது அமைப்புக்களை ஏற்படுத்த அப்பகுதி மக்களின் விருப்பம் அறியப்பட வேண்டுமென்றும்;

(ஆ) மேற்படி ஆலோசனைகள் அனைத்தையும், மத்திய கமிட்டி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாவது தேசிய மாநாட்டுக்குச் சமர்ப்பிக்கத் தயாரித்துவரும் உத்தியோகபூர்வ நகல் அறிக்கையில் சேர்க்கவேண்டுமென்றும்;

[இ] எமது கட்சியின் பொதுவான இலட்சியங்களை, நோக்கங்களைப் பிரதேச மட்டத்திலோ தேசியமட்டத்திலோ ஏற்றுக்கொள்ளக்கூடிய தமிழ்மக்கள் மத்தியில் உள்ள சக்திகளுடன் சேர்ந்து செயற்படத்தக்க வெகுஜன ஸ்தாபனம் ஒன்றை உருவாக்க, கட்சி ஏற்பாடு செய்யுமென்ற நம்பிக்கையையும் தெரிவித்தேன்.

### 11ந் திகதி வந்த தந்தி

"10ந் திகதிக்கு மேல் உங்கள் அறிவிப்பின்பேரில், நேரில் சந்தித்து மிகுதி விபரங்களை விளக்குவேனென்றும் எழுதினேன். 11ந் திகதி இரவு 10 மணிக்கு வீடு திரும்பிய நான் வீட்டில் ஏழரை மணிக்கு வந்து சேர்ந்த தந்தி ஒன்றைப் பார்த்தேன்.

12ந் தேதிக்கு முன்னரே தயவுசெய்துவரவும் என்று அந்த அவசரத் தந்தி கூறியதுடன், அன்றுதான் என்னைப் பற்றிய இறுதி முடிவெடுக்கப் படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

12ந் திகதி காலை விமான மார்க்கமாகப் போக முயற்சித்தாலே அன்றி நான் கொழும்பு சென்று பயனில்லை என்று உணர்ந்தேன்.

### 20 ஆண்டுப் பணிக்கு 2 நாள் கெடு!

போதிய அவகாசம் தராது இருந்த நிலைமையைத் தந்தி மூலம் கட்சிக்கு அறிவித்தேன்.

நான் பங்குகொள்ளாத நிலையிலும் என்னுடன் நேரில் பேசி முடிவுகாண விரும்பிய அவர்கள் 20 ஆண்டுகள் தொண்டாற்றிய எனக்கு இரண்டு நாள் அவகாசம் தருவது அவசியமில்லை என்று எடுத்த முடிவுகளுக்கு வருந்துகின்றேன்.

என்னை நீக்கும் முடிவு, ஏகமனதானதாக இருந்தபோதிலும், சிங்களத் தோழர்கள் அனைவரும் மௌனம் சாதிக்க, அனைவரின் விருப்பத்தையும் மத்திய கமிட்டியில் உள்ள தமிழ்த் தோழர்கள் நிறைவேற்றும்வகையில் உரையாற்றியுள்ளனர்.

சாட்டுகள் சொல்லி என்னை கட்சியிலிருந்து நீக்கினாலும் நான் கடந்த ஓராண்டு காலத்துக்கு மேலாக கூட்டங்களில் முன்வைத்துவரும் கொள்கைகளை இன்னமும் கட்சி ஏற்கவில்லை என்பதுதான் உண்மை!

### நானும் கட்சியும்

நான் வெளியேற்றப்பட்டமையால் இன்று கட்சியில் இல்லை. நான் இறந்திருந்தாலும் நானின்றிக் கட்சி தொடரும்.

இந்நிலையில் என்னைப்பற்றி மறந்து, கட்சி தமிழ் மக்களின் பிரச்னைகளைப் பற்றி தனது நிலையை தெளிவாக்குமா? இதுதான் கேள்வி. எனது கருத்துக்களைப்பற்றி முரண்பாடு இல்லை என்று கூறிக்கொள்ளும் கட்சி, நான் நாட்டு மக்கள் முன் கட்சி ஒரு நிலைப்பாட்டைக் கொள்ளத் தவறுவதை சுட்டிக்காட்ட வேண்டுமென்றே. நான் விட்ட தவறுகளுக்கு என்னைத் தண்டித்துள்ளது. கட்சியினுடைய பொது இலட்சியங்கள், நோக்கங்களுக்கு நான் எதிரானவனல்ல.

### சுயநிர்ணய உரிமை: கட்சி அங்கீகரிக்குமா?

கட்சி காலம் தாழ்த்திய நிலையிலாயினும் தமிழ் மக்களை தேசிய இனமாக ஏற்று சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்தால், தொடர்ந்தும் நான் கட்சியின் ஓர் அனுதாபியாகத் தன்னும் செயற்படலாம். ஆனால் உண்மை நிலைமை, கட்சி, தமிழரைத் தேசிய இனம் என்று ஏற்கத்தயங்குகிறது என்பதே அல்ல என்று கூறும் நண்பர்கள், கட்சியின் தேசிய அறிக்கையில் தமிழர்களைத் தேசிய இனம் என்று ஏற்றுக்கொள்ளவைப்பார்களா? தேசிய இனம் என்று ஏற்றால் தமிழர்களுக்குத் தானாகவே சுய நிர்ணய உரிமை உண்டென்பது லெனினிஸக் கோட்பாடாகும்.

### நான் செய்தது 'புதுமை' அல்ல

நண்பர் திரு. அமிர்தலிங்கத்தின் நியமனப்பத்திரத்தில் கைச்சாத்திட்டேன் என்பது உண்மை. இதே குற்றத்தை கட்சி அனுமதியின்றியே, முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் திரு. பத்மநாதனும் செய்துள்ளார்.

திரு. தா. சிவசிதம்பரத்திற்கு நியமனப்பத்திரத்தில் கைச்சாத்திட்ட அவர் அவரின் கூட்டணிக் கூட்டங்களிலும் பேசியுள்ளார்.

அவர்மீது நடவடிக்கை இன்றுவரை இல்லை!

### 'இவர்கள்'மீது ஏன் நடவடிக்கை இல்லை?

உடுப்பிட்டித் தொகுதியில் கூட்டணி வேட்பாளர் திரு. ரி. இராஜலிங்கத்துக்காக அயராது உழைத்த திரு. சதானந்தனை செயலாளராகக் கொண்ட உடுப்பிட்டிக் கிளை மீதும் நடவடிக்கை இல்லை. திரு. ஏ. தியாகராஜாவுக்காக கூட்டங்களில் பேசிய திரு. உஷா நடராஜாமீதும் நடவடிக்கை இல்லை. திரு. குமாரி பொன்னம்பலத்துக்காகக் கூட்டங்களில் பேசிய முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. மீரான் சாஹிப்மீதும் நடவடிக்கை இல்லை.

என்மீதுமட்டும்தான் நடவடிக்கையா?

இடதுசாரித் தலைவர்களுடனும் சோஷலிஸப் பிரதிநிதிகளுடனும் கூட்டணியினரைச் சந்திக்கவைத்தேன் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது சரி என்று உணர்ந்தேன்; செய்தேன்.

### எது நடப்பினும் எனது பணி தொடரும்!

தண்டனைதான் எனக்கென்றால் இப்பணி தொடர்வது கண்டு மகிழ்கிறேன்.

கட்சிக்குள் இருந்தால் என்ன, வெளியில் செயற்பட்டால் என்ன; நான் ஏற்ற நோக்கங்களை நிறைவேற்ற என்றும் சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தின் நட்புச் சக்தியாக நேச இயக்கமொன்றை அமைத்துச் செயற்பட விரும்புகிறேன்.

எனக்கு எவர்மீதும் குரோதமில்லை. நான் கட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரி நான் பிறந்து வளர்ந்த தமிழ் மண்ணில் வாழும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் பணியில் சர்வதேசத் தொழிலாளர்வர்க்க சகோதரத்துவத்தைப் பேணி நின்று நிலை நிறுத்த விரும்புகிறேன்.

### அனைவருக்கும் நன்றி

கடந்த கால் நூற்றாண்டு காலமாக கம்யூனிஸ்ட் கட்சியில் என்னைச் சேர்த்து எனக்குப் பொறுப்புகள் தந்து வளர்த்தெடுக்க பக்கபலமாக நின்ற தலைமைப்பீட தோழர்களுக்கும் கட்சியின் சாதாரண உறுப்பினர் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்." (உ)

### மணிவாக்கு

விலங்கு வாழ்வுக்கும், மனித வாழ்வுக்கும் உள்ள வேறுபாடு யாதெனப் பல வாறு ஆராய்ந்து பார்த்தால், எங்களுக்குள் எழும் பல சிக்கல்கள் தாமே அகன்றுவிடும்.

—மகாத்மா! காந்தி

## புயல் நிவாரணம்: 4 கோடி 59 லட்சம் வசூல்

சென்னை, பெப். 16

தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரனின் புயல்-வெள்ள நிவாரண நிதிக்கு இதுவரை 4 கோடி 59 லட்சத்து 52 ஆயிரம் ரூபா கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

# கொள்ளையர் அட்டகாசங்களை பொலிஸாரும் ராணுவமும்

## 'ஜீப்'பில் பார்த்துக்கொண்டு சென்றனர்

### அநுராதபுரம் சம்பவங்கள் பற்றி சாட்சியம்

(யாழ்ப்பாணம்

'அநுராதபுரம்வீதியில்கொள்ளையர்கள்தமிழ்க் கடைகளையும் தமிழர்களையும் தாக்கிக்கொண்டிருந்தார்கள். ஜீப்பில் வந்த பொலிசார் அதனைப்பார்த்துக்கொண்டு சென்றனர். அதன்பின் ஜீப்பில் வந்த இராணுவத்தினரும், பார்த்துக்கொண்டு சென்றனர். தமிழர்கள், திணறித் திண்டாடித் திக்குமுக்காடித் திசை தெரியாமல், அங்கு மிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள்''.

சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த அநுராதபுரம் தொலை தொடர்புப் பொறியியலாளர் திரு எஸ். தெய்வசிகாமணி மேற்கண்டவாறு கூறினார்

திரு தெய்வசிகாமணி மேலும் கூறியதாவது:-

நான் அநுராதபுரம் மார்க்கட்டுக்குச்சமீபத்திலுள்ள வீடுதியில் மனைவி பிள்ளைகளுடன் தங்கியிருந்தேன்.

**சீனவெடிச்சத்தம் கேட்டது**

''17-ம் திகதி காலை 5 மணிக்கு கடைத்தெருப் பக்கம் சீனவெடிச் சத்தம் கேட்டது. ஏதோ கொண்டாடுகிறார்கள் என நினைத்தேன் 6 மணியளவில், என் கீழ் பணியாற்றும் ஊழியர் ஒருவர் வந்து தமிழர்கள் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகக் கூறினர். பொலிசார் நடவடிக்கை எடுப்பார்கள் என நினைத்துக் கொண்டேன். அப்போது மற்றும்சில தமிழர்கள் என் விடுதிக்கு வந்தார்கள். மார்க்கட்டிலுள்ள தமிழ்க் கடைகள் உடைக்கப்பட்டன. தமிழர்களைத் தாக்கினர்கள்.

**1000 பேருக்கு மேல் நின்று கொள்ளையடித்தனர்**

ஆயிரம்பேருக்கு மேல் திரண்டுநின்று தமிழ்க்கடைகளைத் தாக்கி கொள்ளையடித்துக்கொண்டு நின்றார்கள். எங்கும் வெடிச்சத்தமும், குண்டுச் சத்தமும், கூக்குரலும், புகை மண்டலமுமாக இருந்தது. தமிழர்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நாலாபக்கமும் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

என்னுடன் பணியாற்றும் அதிகாரி ஜெயசுந்தர, எங்களைத் தங்கள் வீட்டிற்கு வருமாறும், அங்கு பாதுகாப்பாக இருக்கலாம் என்றும் தெரிவித்தார். நான் ஜெயசுந்தராவின் வீட்டிற்குச் செல்ல முற்பட்டேன். மனைவி உடுத்த உடையுடன் தாலியையும் கொண்டுவந்தார். விடுதிச் சாவியை அங்குள்ள ஊழியரிடம் கொடுத்துவிட்டுச் சென்றோம்.

காலை 9 மணிக்குக் கந்தோருக்கு வந்தேன். கந்தோர் பொலிஸ் நிலையத்திற்கு 500 யாருக்கப்பால் இருக்கிறது. உத்தியோகத்தர்கள் எல்லாரும் அங்கிருந்தார்கள்.

**தேடித்தேடி தமிழர்களைத் தாக்கினர்**

காலை 9-45 மணிக்கு நான் கந்தோர் மேல் மாடியில் நின்று நடந்தவற்றைப் பார்த்தேன். வல்லிபுரம் கடையைத் தாக்கிக்கொண்டிருந்தனர். கற்கள் வீசிக்கொண்டிருந்தார்கள் தமிழர்களைத் தேடித்தேடி தாக்கிக்கொண்டிருந்தார்கள். அங்கு ஆயிரக்கணக்கான கொள்ளையர்கள் திரண்டு நின்று கொள்ளையடிப்பதிலும் தமிழர்களைத் தாக்குவதிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

**2 தமிழர்களை 100 காடையர்தாக்கினர்**

2 தமிழர்களை 100 சிங்களக் காடையர்கள் தாக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்து பதைபதைத்தேன். அப்போது அங்கு பொலிசாரைக் காணவில்லை. முன்பக்கமும் பார்க்கக் கூடியதாக இருந்தது. பாதுகாப்பத் தேடித் தமிழர்கள் ஓடிச்செல்வதையும் கண்டேன்.

காலை 10-30 மணிக்கு என் கந்தோர் உள்ள கட்டிடத்தை நோக்கி தாக்க ஆரம்பித்தார்கள். அந்தக் கட்டிடத்தில் உள்ள தமிழ் ஊழியர்கள் என் கந்தோருக்கு ஓடிவந்து, பேச முடியாது நடுநடுங்கிக் கொண்டிருந்தார்கள். நான் மீண்டும் மேல்மாடிக்குச் சென்று பார்த்தேன். பொலிஸ் ஜீப் ஒன்றுவந்தது அங்கு நடப்பதைப் பொலிசார் பார்த்துக்கொண்டு சென்றார்கள். எங்கும் பதட்டநிலை காணப்பட்டது.

**இராணுவமும் மக்களும் வாக்குவாதம்**

அதன்பின், இராணுவ ஜீப் ஒன்று வந்தது. அவர்கள் அங்கு நின்றவர்களைக் கலைக்க முயற்சித்த போது, வாக்குவாதம் ஏற்பட்டது. இராணுவத்தினரும், மக்களும் வாக்குவாதப்பட்டனர். அதன்பின் இராணுவத்தினரும் சென்று விட்டனர்.

கமிஷனர்: இராணுவத்தினர் கூட்டத்தினரைக் கலைத்தனரா?

''கலைக்க முற்பட்டபோது வாக்குவாதப்பட்டு சென்று விட்டனர்.

இராணுவம் போனபின் கொள்ளை தொடர்ந்துகொண்டிருந்தது. வெளியில் பெரும் கூட்டம் நின்றது. நான் இறங்கிப் போகலாமா என ஒருவரைப் பார்க்கச் சொன்னேன். பின் ஜெயசுந்தராவீட்டுக்குப்போகப் புறப்பட்டேன். நான் காரில் ஏறும் போது ஒருவர் என்னைப் பிடித்து இழுத்தார். ஆனாலும், நான் காரில் சென்றுவிட்டேன்.

**ஜெயசுந்தரா பயப்பட்டார்**

17-ம் தேதி ஜெயசுந்தராவின் வீட்டிற்கு வேறு 15 தமிழ் உத்தியோகத்தர்களும், தஞ்சம் தேடி வந்திருந்தனர். எங்களை வைத்திருப்பதால், தனது வீட்டிற்கும் சேதம் ஏற்பட்டுவிடும் என அவர் பயப்பட்டார்

அதனால் அவர் எங்களை அங்கு விட்டுட்டுச்சென்று விட்டார். இரவு 8-30 மணிக்கு 'லைன்ஸ்மன்' ஒருவர் ராதா கிருஷ்ணனின் விடுதியையும் கொள்ளையர்கள் கொள்ளையடித்துவிட்டதாகக் கூறினர். ராதாகிருஷ்ணன் வீட்டுச்சாமான்களையெல்லாம் கட்டி தயாராக வைத்திருந்தார் இதுகொள்ளையர்கள் எடுத்து செல்லவசதியாக இருந்தது.

மறுநாள் ஜெயசுந்தராவீட்டிலிருந்து கச்சேரிக்குச்சென்றோம்.

அன்று காலை 9 மணிக்கு கச்சேரியில் அரசாங்க அதிபரும்

(2-ம் பக்கம் பார்க்க)





றீகல் (யாழ் நகர்)
புதிய வெளியீடு!
அசோக்குமார் — மீனாகுமாரி நடித்த
தினசரி 2-30, 6 30 இரவு 9-45
பக்கீஷா - PAKEEZAH
ஹிந்தி
From; 18-2-78
Crazy Girls and the Funny Boys

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 23-2-78 வரை நீடிக்கப்பட்டுள்ளது
இன்ஸ்பெக்டர் மனைவி
24-2-78 முதல்
ஜெமினி
பத்மினி
ராதா
நடித்த
சித்தி

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பாலசந்தரின்
எதிரொலி
சிவாஜி கே.ஆர் விஜயா நாகேஷ்
(புத்தம் புதிய பிரதி)
சிறுவர்களுக்கான ஆங்கிலப்படம்!
சனி, ஞாயிறு காலை 8-30 மணிக்கு மட்டும் காண்பிக்கப்படும்
"Kingdom in the Clouds"
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஏ. வி எம். ராஜன், ஜெயலலிதா நாகேஷ்
நடித்த
அனாதை ஆனந்தன்
(கலர்— புதியபிரதி)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
மேயர் மீனாட்சி

50-வது வெற்றி நாளை நோக்கி
ராணி
வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனீட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
கணவன்

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
லிடோ (யாழ் நகர்)
போன் 7693
முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9 30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெமினி - சரோஜாதேவி
பனித்திரை

RIO Jaffna
Daily 4 Shows
SURY OF THE BOSPHEROUS

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-45
நினைத்ததை முடிப்பவன்

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-0
சிவாஜி - வாணிஸ்ரீ
சிவகாமியின் செல்வன்

# "ரயில் நிலைய சிற்றூழியரே தாக்குதல் நடத்தினர்!"

[யாழ்ப்பாணம்]

**புங்கங்குளம் புகையிரத நிலையத்தில், ஆகஸ்ட் 16ம் திகதி இரவு மெயில் ரயிலின் சிற்றுண்டிச்சாலை, ஒரு கோஷ்டியினரால் அடித்து நொருக்கப்பட்டு, அங்கு கடமையாற்றிய நான்கு ஊழியர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனரென்று அன்று கடமையாற்றிய பிரதம கார்ட் திரு. எஸ். சதாசிவம் சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.**

"இந்த ரயில் அனுராதபுரம் சென்றதும், சிற்றுண்டிச் சாலையில் வேலைசெய்த 4 ஊழியரும், வெற்றுச்சோடா போத்தல்களை, அங்கு நின்ற ரயில் மீது வீசினார்கள். யாழ்ப்பாணத்தில் சிங்களவர்கள் தாக்கப்படுவதாக அவர்கள் கோஷமிட்டபடி தாக்கினார்கள்" என்றும் அவர் கூறினார்.

அநுராதபுரம் ரயில் நிலையத்தில் பொலிஸ்அதிபர் திரு. லியனகே யாழ்ப்பாணத்தில் நடக்கும் சம்பவத்துடன் ஒப்பிடுகையில் இங்கு நடப்பது நூற்றில் ஒரு பங்கு என்று கூறியதாகவும் தெரிவித்தார்.

ரயில் நிலைய ஓய்வு அறையில், இரு புகையிரதநிலைய அதிபர்கள் குண்டர்களால் தாக்குதலுக்குப் பலியானார்கள்என்றும் திரு சதாசிவம் கூறினார்.

ரயில் நிலையத்தில் கடமையாற்றிய சிற்றூழியரே தாக்குதல் நடத்தியதாகவும் அவர் கூறினார்.

### புங்கங்குளசம்பவம்

சன்சோனி - கமிஷன் முன் சாட்சியமளித்த திரு. சதாசிவம் தொடர்ந்து கூறியதாவது: "நான்காங்கேசன்துறையில் தங்கியிருக்கிறேன். ஆகஸ்ட் 15ம் திகதி நான் அநுராதபுரத்திலிருந்து, காங்கேசன்துறை ரயிலில் கடமையாற்றினேன் 16ம் திகதி 5-55 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு செல்லும் ரயிலில் கடமையாற்றினேன். மாலை 6-15 மணிக்கு ரயில் காங்கேசன் துறையிலிருந்து புறப்பட்டது. அன்று 5 நிமிட தாமதம் ஏற்பட்டது. புங்கங்குளம் ரயில் நிலையத்தில் மறிக்கப்பட்ட ரயில், புறப்பட முடியாமல் இருந்தது. நான் எனது உதவியாளரை அனுப்பி, போய்ப் பார்த்துவரும்படிகூறினேன். அவர் சென்றுவிட்டு வந்து சிற்றுண்டிச்சாலை நொருக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். நான் போய்ப் பார்த்தேன். சகல யன்னல்களும் உடைக்கப்பட்டிருந்தன. உணவுப் பொருட்கள் கடத்தப்பட்டிருந்தன. வெற்றுச்சோடாப் போத்தல்கள் இருந்தன. நான் அங்கு கடமையாற்றிய ஊழியரைத் தேடினேன். ஒருவரையும் சந்திக்க முடியவில்லை. இதனால் ரயில் புறப்பட்டு நாவற்குளி ரயில்நிலையத்தையடைந்தது.

### வெளியேறுமாறுகூறி தாக்கினர்

அங்கிருந்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கும் அறிவித்தேன்.

கமிஷனர்: எப்படி அறிவித்தீர்?- 'டெலிகிராப்' செய்தி

அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அதிர்ச்சியடைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் மீது எவ்விதகாயமும் இருக்கவில்லை. தாங்கள் தாக்கப்பட்டதாக அவர்கள் எவ்வித புகாரும் செய்யவில்லை.

### ஊழியருக்கு காயமில்லை

கமிஷனர்: எத்தனைபேர் வந்தார்கள்?-24பேர்.

"சாவகச்சேரி பொலிஸுக்கு புங்கங்குளத்தில் ரயில் சிற்றூண்டிச்சாலை இனந்தெரியாதவர்களால் முற்றாக நொருக்கப்பட்டுவிட்டதாகவும், அங்குள்ள ஊழியர்களுக்குகாயம் எதுவுமில்லையென்றும், அங்கிருந்த பணத்தையும் காணவில்லையென்றும் நடவடிக்கை எடுக்குமாறும் அறிவித்தேன்.

சென்று கொண்டிருந்த போது எனது ரயிலில் வந்த 4 சிற்றூண்டிச்சாலை ஊழியரும், வெற்றுச்சோடாபோத்தல்களை மறுபக்கத்தில் நின்ற ரயிலுக்கு (கொழும்பிலிருந்து வந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு நின்ற மெயில் ரயில்) எறிந்தார்கள். அந்தரயில் சிற்றூண்டிச் சாலை ஊழியர்களை, யாழ்ப்பாணம் போகவேண்டாமென்றும், அங்கு சிங்களவர்களைத் தாக்குகிறார்களென்றும் கூறினார்கள். யாழ்ப்பாண ரயிலைத் தாக்குமாறும் கூறி சோடாப் போத்தல்களை வீசினார்கள்.

### ரயில்கள் தாக்கப்பட்டன

"யாழ்ப்பாணம் போனால் நீங்கள் தாக்கப்படுவீர்கள் என்று கூறி, வேலை செய்ய வேண்டாமென்று கூறினார்கள்.

## அனுராதபுரம் சம்பவம் பற்றி சாட்சியம்

தில் பதட்டநிலையிலிருப்பதாகவும், சுலோகங்கள் கோஷிக்கப்படுவதாகவும், பங்களா ஊழியர் என்னிடம் கூறினார். கடைகளைத்தாக்கி அக்கூட்டத்தினர் உடைப்பதாகவும் அவர் கூறினார்.

### அதிகாலை 3 மணிக்கு....

அதிகாலை 3 மணிக்கு பங்களாவிற்கு, 'லொக் லோமோடிவ்' போர்மன் டபிள்யு. ஏ. பெரேரா வந்து நித்திரையாக இருந்த என்னை எழுப்பி அநுராதபுரம் மாவட்ட சுப்பிரிண்டன், அங்குள்ள தமிழ் உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம் செல்ல ஒரு விசேட ரயிலை ஒழுங்குசெய்வதாகவும், காலை 4-30 மணிக்குமுன் அநுராதபுரம் ரயில் நிலைய மேல்மாடியில் உள்ள ஓய்வு அறைக்குச் செல்லுமாறும் கூறினார்.

"நான் அரசு உடைமைகள் யாவற்றையும்கொண்ட எனது பாக்கை. திரு. நந்தசேனவிடம் ஒப்படைத்துவிட்டு ஓய்வு அறைக்கு எனது பெட்டியுடன்சென்றேன். அங்கு ரயில்நிலையத்தில் கடமையாற்றும் சகல தமிழ் உத்தியோகத்தர்களும் அங்கு இருந்தார்கள்.

"மடுரோட்டிலிருந்து வரும் ரயிலை யாழ்ப்பாணம் அனுப்ப ஒழுங்கு செய்வதாக சுப்பிரின்டன் கூறினார். அதுவரை எங்களுக்கு பாதுகாப்பளிப்பதாக உறுதியளித்தார். நாங்கள் பாதுகாப்பாக இருக்கலாம் என்று கருதினோம்.

தாகவும், எச்சரிக்கையாக இருக்குமாறும் கூறினார். காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபின் பொலிஸாரால் எதுவும் செய்ய முடியாமல் இருக்கும் என்றும் கூறினார். அதன்பின் சுப்பிரிண்டன் அங்குவந்தார். அவரிடம், அங்குபாதுகாப்பாக இருக்க முடியாதென்பதை அவருக்கு விளக்கினோம். நாங்கள் கூறியது அவருக்கு விளங்கியது. விசேட ரயில் யாழ்ப்பாணத்திற்கு அச்சமயம் ஒழுங்குசெய்யமுடியாமல் இருப்பதாககூறி எங்களுக்கு இராணுவபாதுகாப்பு அளித்துவிட்டு அவர் சென்றுவிட்டார். அதன்பின் அவர் வரவில்லை.

### எல்லோரும் ஒரே அறையில்

இரவு 9-30 மணியளவில் 2 இராணுவ வீரர் அங்குவந்தனர். எங்களை பாதுகாப்பதாக உறுதியளித்தனர். 10-30 மணியளவில் இராணுவ வீரர்கள் வந்து எங்களை அறைகளில் ஓய்வு எடுக்குமாறு கூறினார்கள். 11 மணிக்கு நாங்கள் எல்லாரும் படுக்கச் சென்றோம். நான் முன்பு சென்ற அறைக்கு போய் மீண்டும்மலகூடத்திற்கு சென்றேன். பின்வந்து அறையின் மூலையில் ஒரு பாயை விரித்துப் படுத்தேன். அப்போது அங்கு பி. செல்லத்துரை, எஸ். பாலசிங்கம் நடராசா, எம். சதாசிவம், ரி நாகரத்தினம், எஸ். சிவபாதசுந்தரம் மற்றும் 2 தமிழ் சிற்றூழியர்கள் இருந்தார்கள்.

# ரயில்தலைமைப்பாதுகாவலர் தரும் அதிர்ச்சித் தகவல்கள்!

நாவற்குழியில் 4 சிற்றூண்டிச்சாலை ஊழியர்களையும், எனது 'கண்ட்' வானில் ஏற்றினேன் மதவாச்சிவரை அவர்கள் என்னுடன்தான் இருந்தார்கள்.

"சாவகச்சேரி புகையிரத நிலையத்தில், சாவகச்சேரி பொலிசார் கொடுத்த தகவல் ஒன்றை ரயில் நிலைய அதிபர் அறிவித்தார். வருவதற்குவாகனம் இல்லையென்றும் சம்பவம் பற்றி மருதானைக்குச் சென்றதும், பொலிசாருக்குஅறிவிக்குமாறும், அவர்கள்நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் அந்தத் தகவலில் கூறப்பட்டிருந்தது.

"மீசாலையில், எனது பெட்டிக்கு ஒருகல் வீசப்பட்டதால் யன்னல் ஒன்றுசேதப்பட்டது.

"மதவாச்சி ரயில் நிலையத்தில், என்னுடன் தங்கியிருந்த 4 ஊழியர்களும், தாங்கள்சிற்றூண்டிச்சாலைக்குசென்று தங்கள் உடைமைகளை எடுத்து

ரயில் நிலையத்தில் நின்றவர்கள் சிற்றூழியர்கள். எல்லாரும் அங்கு நின்ற இரு ரயில்களையும் தாக்கினார்கள்.

"பிரயாணிகள் யன்னலால் பாய்ந்தார்கள். பாதுகாப்புத் தேடி ஓடினார்கள். எங்கும் அவலக்குரல். எங்கும் மரணஓலம் கேட்டுக்கொண்டிருந்தது.

"கொழும்பிலிருந்து வந்த ரயிலில் பொலிசார் துப்பாக்கியுடன்வந்திருந்தனர். அவர்கள் கடமைக்கு வந்தார்களா என்பது எனக்குத் தெரியாது. தமிழ்ப்பிரயாணிகள் தாக்கப்பட்டதை பொலிசார் பார்த்துக் கொண்டிருந்தனர்.

### குண்டர்கள் தாக்கினர்

"என்னுடன் கார்ட் எம். சுப்பிரமணியம், கார்ட் எம். தோமஸ், சாரதிகளான எம். இரத்தினசிங்கம், என். விக்கினேஸ்வரன் ஆகியோர் இருந்தார்கள் இரவு 8 மணி போல் நான் மலகூடத்திற்கு சென்றிருந்தேன். அச்சமயம் எதிரில் உள்ள அறையில் பி. செல்லத்துரை, ரி. நாகரத்தினம், எஸ். சிவபாதசுந்தரம், வி. திருஞானசம்பந்தர், கே. நடராசா, (செட்டிகுளம் ரயில் நிலைய அதிபர்), எம். நடராசா (அனு

### விளக்கை அணைத்து தாக்கினார்கள்

11-10 மணிக்கு கிலர் பி. செல்லத்துரையை அழைத்தார்கள் அவர்பதிலளித்தார் சிறிது நேரத்தால் ஒரு கோஷ்டியினர் வந்து லைட்டை அணைத்துவிட்டார்கள். பின் அறைகளை உடைத்து திறந்து எல்லாரையும் தாக்கத் தொடங்கினார்கள் 4 பேர் மலகூடத்திற்குள் சென்று பூட்டிக்கொண்டார்கள் 4 பேர், கட்டிலுக்கு அடியில் பதுங்கிக்கொண்டார்கள். நான் அவருக்கும் கட்டிலுக்கும் அருகில்பதுங்கிக்கொண்டேன். கட்டிலுக்குகீழ் பதுங்கிய நால்வரும் பலமாக தாக்கப்பட்டனர். 4 குண்டர்கள் மட்டுமே அறைக்குள் வந்தனர்.

திரு பாலசிங்கம் என்பவர், ரயில் பகுதி ஊழியர் ஒருவரால் தாக்கப்பட்டார். பாதுகாப்பு காரணமாக அவரின் பெயரை நான் அப்போது கூறவில்லை.

கமிஷனர்: அவரின் பெயர் என்ன?- சமரநாயக்கா. அவர் ரயில்வே பங்களா சமையல்

# 17-ம் திகதி இரவு நிகழ்ந்தபயங்கரம்!

மூலம் அறிவித்தேன் ரயில்வே தொலைபேசிமூலம், அநுராதபுரம் கட்டுப்பாட்டதிகாரிக்கும், மாவட்ட சுப்பிரிண்டனுக்கும், புகையிரதப்பகுதி பொது முகாமையாளருக்கும் அறிவித்தேன். அப்போது, சிற்றூண்டிச்சாலை 4 ஊழியரும் அங்கு வந்தனர். தாங்கள் ரயிலில் பதுங்கியிருந்ததாகக் கூறினார்கள். இனந்தெரியாத சில நபர்கள், சிற்றூண்டிச்சாலையைத் தாக்குமுன், தங்களை வெளியேறுமாறு கூறியதாக

வரப்போவதாகவும் சென்றார்கள்.

### 17ந் திகதி இரவு...

"17ம் தேதி இரவு 1 25 மணிக்கு ரயில் அநுராதபுர ரயில்நிலையத்தை அடைந்தது நான் தலைமை 'கார்ட்' திரு. எஸ் விநாயகமூர்த்தியிடம், பொறுப்பை ஒப்படைத்தேன் அங்கிருந்து கொழும்பு வரை அவர்தான் 'கார்ட்'டாக கடமையாற்றவிருந்தார். நான் நடைபாதையில் இறங்கிச்

## தாக்குதல் பற்றி கூறியபோது 'வாயைமூடு' என்றார் எஸ்.பி.!

கமினர்: ரயில் உத்தியோகத்தர்களும் தாக்கப்பட்டனரா?- இல்லை. ரயில் பிரயாணிகள்மட்டும் அந்நேரம் தாக்கப்பட்டனர்

"பிரயாணிகள் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள் சிலர் புகையிரத உத்தியோகத்தர்களிடம் தங்களைக் காப்பாற்றும்படி கூறினார்கள். எவ்விதஉதவியும் வழங்கப்படவில்லை. 1ம் பிளாட் பாரத்தில் ஆயுதம் தாங்கிய பொலிசார் நின்றனர். நடவடிக்கை எடுக்கவில்லை.

கமிஷனர்: பொலிசார் சும்மா பார்த்துக் கொண்டு நின்றனர்?-ஆம்"

கமிஷனர்? எத்தனை பொலிசார் நின்றனர்?- 10 பேர்நின்றனர் சிலர் யூனிபோமுடன் நின்றார்கள். சிலருக்கு யூனிபோம் இல்லை. துப்பாக்கி, பட்டன் வைத்திருந்தனர்

"நான் போய் ரயில் அதிபர் கந்தோரில் வரவைப்பதிந்துவிட்டு, எனது பங்களாவிற்கு சென்றேன். அப்போது. நகரத்

ராதபுரம் ரயில் நிலைய அதிபர்) இருந்தார்கள். நான் மலகூடத்தில் இருக்கும் சமயம் மற்றவர்கள் கதவைப்பூட்டிவிட்டு ஹோட்டலுக்கு சென்றார்கள் நான் மலகூடத்தில் இருப்பது எவருக்கும் தெரிந்திருக்கவில்லை அவர்கள் ஹோட்டலுக்குப் போனதும், அங்குவந்த குண்டர்கள் அவர்களை தாக்கி, அவர்களின் சூட்கேசுகளை கொள்ளையடித்தனர். நான் மலகூடத்திலிருந்ததால், தாக்குதலுக்கு தப்பிக் கொண்டேன்.

"இந்த தாக்குதல், மாவட்ட சுப்பிரிண்டனின் கவனத்திற்கு அவரது உதவியாளர் மூலம் கொண்டுவரப்பட்டது நாங்கள் அங்கு தங்கியிருக்க அஞ்சினோம். சிறிது நேரத்தில் ஒரு பொலிஸ் கான்டபிள் வந்தார் அவரை நான் அடையாளம் காட்டமுடியும். அவர் வந்து மகோ புகையிரத நிலையம் எரிக்கப்பட்டுவிட்டதாகவும், மணிக்குமுன் அனுராதபுரம் ரயில் நிலையத்தை எரிக்க முயற்சி மேற்கொள்ளப்படுவ

காரர் அவர்கள் எங்களை 'தமிழர்களே யாழ்ப்பாணம் போய் விடுங்கள்' என்று சொல்லி அடித்தார்கள். எங்கள் உடமைகளைக் கொள்ளையடித்தார்கள்.

### இரண்டு நிமிட சம்பவம்

கமிஷனர்: உமக்கு அடித்தார்களா? இல்லை என்உடமைகளைக் கொள்ளையடித்தார்கள் 1000- ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்தார்கள்.

கமிஷனர்: சமரநாயக்காவிற்கு என்ன நடந்தது? அவர் பின் கைதுசெய்யப்பட்டு 3 மாதம் றிமாண்டில் இருந்து தற்போது பிணையில்விடப்பட்டுள்ளார். பின் குண்டர்கள் கோஷமிட்டுக்கொண்டு அவ்விடத்தைவிட்டு சென்றார்கள் இராணுவத்தினர் அம்புலன்ஸ் ஏற்பாடு செய்து காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். இச்சம

(6-ம் பக்கம் பார்க்க)

# வேலைக்கு செல்லாமல் தப்பி வந்தவருக்கு யாழ்.நகரில் அடி

## நடக்கமுடியாத அவர் நேற்று கமிஷன் முன் சாட்சியமளித்தார்

[யாழ்ப்பாணம்]
தனது சொந்த ஊரான பருத்தித்துறையிலிருந்து கெபற்றிபொல நீதிமன்றத்திற்கு கடமைக்கு சென்றவர் வவனியாவில் இறங்கி பஸ்ஸிற்கு காத்திருந்தபோது, அநுராதபுரத்தில் தமிழர்கள் தாக்கப்படுவதாக அறிந்து லொறியொன்றில் யாழ்ப்பாணம் வந்தபோது, யாழ்ப்பாணத்தில் வைத்து, பொலிஸாரினால் பயங்கரமாக தாக்கப்பட்டதால், நடக்கும் சக்தியை இழந்து விட்டேன்

இத்தகவலை நீதிமன்ற பதிவாளரான சிவப்பிரகாசம் சுந்தரலிங்கம், சன்சோனி கமிஷன் முன் தெரிவித்தார்.

நடக்கமுடியாத அவரை, நான்கு இளைஞர்கள், கதிரையில் வைத்து யாழ்ப்பாணம் பொது நூலக இரண்டாம் மாடியில் நடக்கும் சன்சோணி விசாரணை மண்டபத்திற்கு தூக்கிவந்தனர். அவர் கதிரையில் இருந்துகொண்டே சாட்சியமளித்தார்.

அவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது! 16ம் தேதிமாலை தான் பருத்தித்துறையிலிருந்து கெப்பிட்டிபொலாவிற்கு புறப்பட்டேன். கொடிகாமத்துக்கு வந்து அங்கிருந்து ரயிலில் சென்று வவனியாவில் இறங்கினேன் கெப்பிட்டிபொல போவதற்கு பஸ் நிலையத்தில் அங்கு காத்து நின்றேன் அப்போது மட்டக்களப்பிலிருந்து வந்த பஸ்ஸில் பல காயக்காரர்கள் வந்தார்கள் அவர்கள் அனுராதபுரம் பஸ் நிலையத்தில் தாங்கள் தாக்கப்பட்டதாக கூறினார்கள். அனுராதபுரத்தில் காயமடைந்தவர்கள் லொறியிலும் வந்தார்கள் அனுராதபுரத்தில் நடந்தவற்றை அவர்கள் மூலம் அறிந்தேன்.

வீட்டுக்கு திரும்புவதுதான் புத்தியென கருதினேன். அப்போது எனக்குத்தெரிந்த பருத்தித்துறை லொறியொன்று ஓடுகள் ஏற்றிக்கொண்டு, கொழும்பிலிருந்து வந்தது லொறிச்சாரதி பாலசிங்கத்தை எனக்குத் தெரியும் நான்லொறியை மறித்தேன் மூன் ஆசனத்தில் எனக்கும் இடம்தந்தார்கள்.

யாழ்ப்பாணத்திற்குலொறிவந்தது கொடிகாமத்தில் என்னை இறங்கப்போகுறீர்களா? எனக் கேட்டார்கள் அப்போது கொடிகாமம் பஸ் நிலையத்தில் பஸ் ஒன்றும் இல்லை. அதனால் லொறியில் யாழ்ப்பாணம் சென்றேன் யாழ்ப்பாணத்தில் ஓடுகளை பறித்துவிட்டு, பருத்தித்துறைவீதியில் வந்தோம். ஆரியகுளம் சந்தியை அடைந்ததும் ஏழெட்டு பொலிஸார் லொறியை மறித்தார்கள் பின் போகவிட்டார்கள். நாக விகாரை சந்திக்கு வந்தோம் அங்கு நின்ற பொலிஸார் லொறியை மறித்து முன் கண்ணாடியை உடைத்தார்கள். யூனிபோமுடம் நின்றார்கள்., றைபிள் வைத்திருந்தனர், மற்றவர்கள் லொறியை தாக்கத் தொடங்கினார்கள்.

நான் லொறியிலிருந்து இறங்கினேன் ஒரு பொலிஸார் முழங்காலில் றைபிள் பிடியால் பலமாக அடித்தார் என் முழங்கால் சில்லு நொருக்கியது அவர் குறை தமிழில் ஏசினார்கள் எதுவும் கூற வில்லை கருணாகரல காண்டஎப்ப (தயவு செய்து அடிக்காதீர்கள்) என சிங்களத்தில் கூறினேன். எனக்கு சிங்கள நண்பர்கள் நிறைய இருப்பதாகவும் கூறினேன். என்னை வாய்க்காலுக்குள் தள்ளிவிழுத்தினார்கள் நான் மயக்கமடைந்துவிட்டேன். பின் சிலர் என்னை மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள் யார் கூட்டி சென்றார்கள் என எனக்குத் தெரியாது. லொறிசாரதி கிளீனருக்கும் அடித்தார்கள் அவர்களுக்கு கடும் காயம் ஏற்படவில்லை. பின் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டேன்.

இப்ப நடக்கமுடியாது. தடியின் உதவியுடன் சிறிது தூரம் நடக்கலாம் முழங்கால் மடிக்கமுடியாது. தற்போது பருத்தித்துறை நீதிமன்றத்தில் கடமையாற்றுகிறேன். காரில் தான் வேலைக்கு போவேன்.

தமிழர் என்ற ஒரே காரணத்தினால் தான் பொலிஸார் என்னை கண் மண் தெரியாமல் தாக்கினார்கள் என்பதை அவர்கள் பேச்சிலிருந்து அறிந்து கொண்டேன். [க]

## ரயில்நிலைய சிற்றூழியரே—

[5-ம் பக்கத்தொடர்ச்சி]
பவம் 2 நிமிடத்தில் நடந்து முடிந்தது.

'எனது அறையில் காயமடைந்த நால்வரில் செட்டிகுளம் புகையிரத நிலைய அதிபர் சதாசிவமும், அனுராதபுர ரயில் நிலைய அதிபர் நடராசாவும் இறந்துவிட்டார்கள். செட்டிகுளம் ரயில் நிலைய அதிபர் சிகிச்சைபெற அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தார் அச்சமயத்தில்தான் அவர் சிக்கிக் கொண்டார். அவர் 4 நாட்களுக்குபின் இறந்தார்.

கட்டுப்பாட்டதிகாரி செல்லத்துரை சத்திரசிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டார்.

இச்சம்பவம் நடந்தபின் அனுராதபுரம் பொலிஸ் அதிபர் லியனகே அங்கு வந்தார்.

கமிஷனர்: எங்கே? ஓய்வு பெறும் அறைக்கு, நாங்கள் அவருக்குபுகார்செய்து எங்களை பாதுகாப்பான இடத்திற்கு அனுப்புமாறு கேட்டோம். காலை 7-15 மணிக்கு எஸ் பி. வந்தார். யாழ்ப்பாணம் சென்றிருந்த எஸ் பி லியனகே அங்கிருந்துவந்த சிங்கள அகதிகளுடன் வந்திருந்தார்.

"நாங்கள் நடந்தவற்றை எஸ் பிக்கு கூற முற்பட்டபோது எங்களை அவர் பேசவிடவில்லை. 'வாயை மூடுங்கள்' என்றார்.

நான் யாழ்ப்பாணத்திலிருந்து தற்போதுதான் திரும்பிவருவதாகவும், யாழ்ப்பாணத்தில் நடந்தவற்றுடன் ஒப்பிடுகையில், இங்கு நடப்பது நூறில் ஒரு பங்கு என்று எஸ் பி கூறினார்.

### கேர்ணல் அமிர்தலிங்கம்

'எனக்குபுகார்செய்யாதீர்கள் கேர்ணல் அமிர்தலிங்கத்திடம் புகார் செய்யுங்கள்' என்று பொலிஸ் அதிபர் கூறினார்.

கமிஷனர்: கார்னல் அமிர்தலிங்கம் யார்? இளைப்பு அதிகாரியா?- எனக்குத் தெரியாது அவர் அப்படி சொன்னார்.

[சபையில் சிரிப்பு]

கமிஷனர்: நீங்கள் கூறியவற்றை அவர் கேட்கவில்லை? ஆம். 5 நிமிடத்திற்குப் பின் இராணுவத்தினர் வந்து எங்களை கச்சேரிக்குசெல்ல ஆயத்தமாக இருக்க சொன்னார்கள். யாழ்ப்பாண அகதிகளைக் கொண்டுவந்த பஸ்களில் நாங்கள் கச்சேரிக்குச் சென்றோம். கச்சேரியில் ஒரு பிளேன்ரிக்கு கூட வழியில்லை 18ம் தேதி இரவு 1மணிக்கு தண்ணீர் விநியோகம் தடைசெய்யப்பட்டது வவனியாவிற்கு அங்கிருந்து பஸ்களில் அனுப்பப்படும்வரை நாங்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டோம் 5-30 மணிக்கு வவனியாவை வந்தடைந்தோம். அங்கிருந்து பஸ்களில்காங்கேசன் துறையை மறுநாள் காலை 6 மணிக்கு வந்தடைந்தோம்.

சட்டத்தரணி சாம் கதிர்காமர் கியு சியின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் சதாசிவம் கூறியதாவது;

"கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் ரயிலில் பொலிஸார் போனார்கள் இடமாற்றம்பெற்று போவதாக சொன்னார்கள் யாழ்ப்பாணத்திலிருந்துவந்த ரயிலிலும் பொலிஸார் வந்ததாக அறிந்தேன். அவர்கள் யூனிபோம் அணியவில்லை. அனுராதபுரத்தில் இறங்கினார்கள் பட்டன், துவக்கு வைத்திருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் ஏறி அனுராதபுரத்தில் இறங்கினார்கள். (க)

## ஒருவருக்கு...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

சந்தேகநபர்களான ரவீந்திரன், இராசசேகரன், தர்மசேகரன் ஆகிய இம் மூன்று இளைஞர்களும் தாங்கள் மூளாய் ஆஸ்பத்திரியில் மருந்து எடுத்துக்கொண்டு பஸ்ஸில் வந்து இறங்கியதாகவும் இத்த திருட்டை தாங்கள் செய்யவில்லையெனவும் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

நீதிபதி முதலாவது சந்தேகநபரை 1000 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டு மேல் விசாரணையை எதிர்வரும் 22ம் திகதிக்கு ஒத்திவைத்தார் மற்றைய இரு சந்தேகநபர்களும் விடுதலை செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி மு திரு மு திருநாவுக்கரசு ஆஜரானார். [உ]

## மரண அறிவித்தல்

### இளையதம்பி முத்துத்தம்பி

மட்டக்களப்பைச் சேர்ந்த இளையதம்பி முத்துத்தம்பி காலமானார். இவர் வல்வெட்டித்துறை புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், விஜயகுமார்,' சாந்தகுமார், வசந்தகுமார், யோககுமார், சுலோசனாதேவியின் அன்புத்தந்தையும், விஜயரத்தினம், மோதிலால்நேரு, உஷாதேவி, விஜயலட்சுமியின் மாமனாரும் பங்கேஸ்வரி, குமரகுரு, பரமகுருவின் மைத்துனருமாவார் அன்னாரது ஈமைக்கிரிகைகள் இன்று மாலை 4-00 மணிக்கு காங்கேசன்துறையில் நடைபெறும். 8538

## "எனது வீட்டைத்தாக்கி தீவைத்தனர்!"

[யாழ்ப்பாணம்]
"கிரிலப்பனையில் உள்ள எனதுவீடு கலவரத்தின் போது கொள்ளையர்களால் தாக்கப்பட்டு, தீயிடப்பட்டது? ஒரு லட்சத்துநாற்பதினாயிரம் ரூபா பெறுமதியான வீட்டின் முக்கால் பாகம், எரிந்துவிட்டது.

சன்சோனி விசாரணை கமிஷன்முன் நேற்று சாட்சியமளித்த நல்லூரைச் சேர்ந்த திருமதி எல். ஞானசம்பந்தர் கூறினார்.

திருமதி ஞானசம்பந்தர் மேலும் கூறியதாவது! "நான் கிரிலப்பனையில் 7 வருடங்கள் இருந்தேன். ஆகஸ்ட் 24ம் தேதி எனது வீடு தீக்கிரையாக்கப்பட்டது.

கமிஷனர்; சேதம் எவ்வளவு?-1லட்சத்து 40,000ரூபா.

கமிஷனர்: தளபாடச் சேதம்'- 60,000 ரூபா.

கமிஷனர்: தளபாடத்திற்கு என்ன நடந்தது?. அடித்து உடைத்து நொருக்கப்பட்டது. 12,000 ரூபா நகைகளும் இருந்தது. எனக்கு நல்லூரில் சொந்தவீடு இல்லை. தற்காலிகமாகவே இருக்கிறேன் எனக்கு கொழும்பிலும் சொந்தக்காரர் இடையாது நான் சம்பவம் பற்றி புகார்செய்தேன். அதன் பிரதி என்னிடம் இருக்கிறது" [ஈ]

## யாழ் சம்பவம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வும், வைத்தியஆய்வுகூட உத்தியோகத்தர் சிவசம்புவை தாக்கினார்கள் அவர் அங்கு இறந்துவிட்டார் வேலாயுதம் அப்பரையும் தாக்கினார்கள் நான் மட்டும்தான் அங்கு இருந்தேன். மற்ற எல்லாரும் பாய்ந்து ஓடிவிட்டார்கள்

வைத்தியஅத்தியட்சகர், திரு கே எம் கே வி ஜயவர்த்தன அங்கு வந்தார். பொலிஸ் அதிபர் லியானகேயும் வந்தார். தான் இப்போதுதான் யாழ்ப்பாணத்திலிருந்துதிரும்பியுள்ளதாகவும், இங்கு நடந்த சம்பவங்களையிட்டு கவலைப்படுவதாகவும் நான் அனுராதபுரத்தில் இருந்திருந்தால் இப்படி ஒன்றும் நடந்திருக்காது என்றும் கூறினார்.

வைத்திய அத்தியட்சகர், விஜயவர்த்தன யாழ்ப்பாணத்தில் என்ன நடந்துள்ளது என்று கேட்டார். அதற்குப் பொலிஸ்அதிபர் லியனகே, சிங்களவர் அங்கு கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தாக்கப்பட்டதாகவும், வீதிகளில் இளம் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகவும் கூறினார்

அனுராதபுரத்தில் நடந்தவற்றை யாழ்ப்பாணத்தில் நடந்தவற்றுடன் ஒப்பிடுகையில் ஒன்றுமே இல்லையென்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளதிலும் நூறில் ஒரு பங்குதான் அனுராதபுரத்தில் நடந்திருப்பதாகவும் கூறினார். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க டாக்டர்கள் மறுப்பதாகவும் பொலிஸ் அதிபர் கூறினார்.

இப்படியான நிலையில் இவர்களை வைத்திருக்கக்கூடாதெனவும் கூறினார். அவர் இப்படி கூறியும், நான் உங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதாக எம் எஸ் எங்களிடம் சொன்னார். எனக்கு இன்னும் சம்பளம் வழங்கப்படவில்லை.

## சிற்ற பேக்கரி—

[1ம் பக்கத் தொடர்ச்சி]
[ஆமட்கார்] 20ம் தேதி இரவு வந்தது.

எனக்கு அவற்றை மின்சார நிலையத்திலிருந்து பார்க்க முடியும் டெலிபோன் மேசையிலிருந்து சரிந்தபடி, யன்னல் ஊடாக ஆடாமல் அசையாமல் பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஏ.எஸ் பி. ஜெயசூரியாவுக்கு வாக்குமூலமளித்தேன் 67ம் ஆண்டு முதல் 72ம் ஆண்டுவரை நான் ஸ்பெசல் பொலிஸாக இருந்தேன் பின் மாநகரசபையில் சேர்ந்தேன். [க]

## DEATH NOTICE

P. Thuraisingham

Ponniah Thuraisigham. of Mallakam, beloved husband of Rajambal brother of Sugirtharatnam, & Ranee ratnam. Brother-in-law of Ratnasabapathy. late Mr. T. T. Jayaratnam, (Principal, Mahajana College) G. V. Balasingham (Attorney - at law) K. V. Kanagasingham, (Singapore) Cousin of Mr & Mrs T. Dharmarajah late Ratnammal, A. Nadarajah M. Thanabaasingham and uncle of Mr & Mrs K. Vigneswaran (Nigeria) Dr & Mrs Maheswaran (Trincomalee) Dr & Mrs J. Jayakumaran, Kannan, Dr & Mrs (Dr) N. Ganeshanathan and Mr. Mrs Gnasurdaram expired. Funeral took place yesterday 4 pm at Mallakam 8532

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu. Telephone 389 Registered as a Newspaper in Srilanka